(முழுப் பதிப்புரிமையுடையது)
(All rights reseved)



கொரோணா தொற்று நோய்

விசேட பாடசாலை விடுமுறை கால கல்வி வேலைத்திட்டம்- 2020

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு

14 தலைப்புக்களின் கீழான நுண்ணறிவு செயலட்டை

இலக்கம் -4 மொழி பெயர்ப்பு

ஆக்கம்.

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

071-182-6-181 – 077-635-8-304

அன்பின் சிறார்களே! உலகம் முழுவதும் பரவி வரும் கொரோணா வைரஸ் காரணமாக உங்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டில் இருந்தவாறே இங்கு காணப்படும் பயிற்சியையும் மேலதிக பயிற்சிகளையும் செய்து உங்கள் கல்விச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படியும் வீணாக தொலைக்காட்சி பார்த்து காலத்தைக் கழிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த தொகுப்பில் மொழி பெயர்ப்பு தொடர்பான விளக்கத்தையும் மாதிரி பயிற்சிகள் சிலவற்றையும் ஒன்று திரட்டி உங்கள் கைகளில் வழங்கியிருக்கின்றேன் அவைகளை நன்றாக விளங்கிக் கொண்டு இயலுமான வரையில் சுயமாக செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்கிறேன். - நன்றி



www.ikeduk

மொழி பெயர்ப்பு

⁂ பின்வரும் வசனங்களில் கோடிடப்பட்ட சொற்கள் உணர்த்தும் பொருளை கோடிடுக.

1) நாம் வறியவர்களுக்கு **<u>கை கொடுக்க</u>** வேண்டும்

1.பணம் கொடுத்தல் 2. உதவி செய்தல் 3. கையால் கொடுத்தல்

2) தம்பி கடைக்குச் சென்று சைக்கிள் வாங்கிக் கேட்டு **<u>ஒற்றைக் காலில்</u>** நின்றான்.

1.ஒரு காலில் நிற்றல் 2. மகிழ்ச்சியாக நிற்றல் 3. பிடிவாதமாக நிற்றல்

3) விவசாயிகள் **<u>ஏர்</u>** கொண்டு வயலை உழுதார்கள்

1.கலப்பை 2. மட்டப் பலகை 3. உழவு இயந்திரம்

4) மிக நீண்ட காலம் நோயுற்ற சரத் **<u>எலும்புந் தோலுமாகக்</u>** காட்சியளித்தான்.

1.அழகாக 2. மிக மெலிந்து 3. பருமனாக

5) வயலில் வேலை செய்த மக்கள் மரத்தடியில் சிறிது நேரம் **<u>உறங்கினர்</u>** .

1.அமர்ந்தனர் 2. படுத்தனர் 3. நடந்தனர்

6) ஜனாதிபதியை மக்கள் **<u>புகழ்ந்து</u>** பேசினர்

1.இகழ்ந்து 2. பெருமை 3. பாராட்டி

7) மாத்தறைக்கு **<u>அண்மையிலுள்ள</u>** நகரம் காலியாகும்

1தொலையில் 2. தூரத்தில் 3. அருகில்

8) எமது நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கு தேயிலை **<u>ஏற்றுமதி</u>** செய்யப்படுகிறது.

1கொண்டு வருதல் 2. அனுப்புதல் 3. எடுத்து வருதல்

9) நாம் ஏழைகளுக்கு **<u>சுவிரக்கம்</u>** காட்ட வேண்டும்.

1.கோபம் 2. கருணை 3. அச்சுறுத்தல்

10) ஆசிரியர் சொல்வதைக் **<u>காது கொடுத்து</u>** கேட்க வேண்டும்.

1.நன்றாக செவிமடுத்தல் 2. நன்றாக பார்த்தல் 3. அவதானித்தல்

11) நாம் பெற்றோர் **<u>மனம் நோகப்</u>** பேசக்கூடாது.

1.ஆறுதலடைய 2.புண்படுத்த 3. மகிழ்ச்சியடைய

12) மகன் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றதால் அம்மா **<u>உச்சி குளிர்ந்தாள்.</u>**

1.கடுங் கோபம் 2. மிக மகிழ்ச்சி 3. வருத்தம்

www.ikedu.lk

⁂ பின்வரும் பந்தியிலுள்ள பழமொழிகளின் பொருளை எதிரிலுள்ள அடைப்பில் எழுதுக.

என்னுடைய பாட்டி ''ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு" 1. (..... .....) என்று என்னைப் பார்த்துச் சொல்வார். அப்போது எனக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. பெரியவனாகிய பிறகுதான் புரிகிறது. கோபத்தால் என் நண்பர்கள் பலரை இழந்திருக்கிறேன். நான் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கும் போது ''ஆழம் அறியாமல் காலை விடாதே" 2. (.....) என்று தாத்தா புத்திமதி சொல்வார். அவரது ஆலோசனைகளைக் கேட்டி ருந்தால் நான் தோல்விகளைச் சந்தித்திருக்க மாட்டேன்.''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' 3. (.....)என்று அப்பா அடிக்கடி சொல்வார். நான் கிடைத்த நல்ல வாய்ப்புகளை எல்லாம் தவற விட்டதால் இன்று வேதனைப் படுகின்றேன். நான் தோல்விகளைச் சந்திக்கும் போதெல்லாம் என் அம்மா ''வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்" 4. (..... .....) என்று சொல்லி நம்பிக்கையூட்டுவார். அது மட்டுமல்ல. ''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' 5. (..... .....) துவண்டு விடாதே. முயற்சி செய் என்றும் தன்னம்பிக்கை ஊட்டுவார்.என்னைச் சுற்றி நல்ல சொந்தங்கள் இருந்தும் நான் இப்படி இருப்பதற்கு யார் காரணம் நான் தானே?

⁂ பின்வரும் விபரங்களை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) ஓர் ஆற்றங்கரையில் வானளவாக வளர்ந்ததோர் ஆலமரம் நின்றது. பத்துப் பேர் சேர்ந்தாலும் அதன் அடி மரத்தைக் கட்டிப் பிடித்தல் முடியாது. அவ்வளவு பருமனுடையது அது. அதன் கிளைகளைத் தூண் போன்ற விழுதுகள் தாங்கி நின்றன. விழுதுகள் எத்தகையன என விளக்குவதற்கு இங்கு கையாளப்பட்ட உவமானம் யாது?'.....

2) ''கன்றை நினைத்தே உள்ளம் கசியும் பசுவைப் போல நன்றி புரிந்தோர் தம்மை நாமும் நினைக்க வேண்டும்.'' எமக்கு நன்மை செய்தவர்களை நாம் எவ்வாறு நினைக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கு இங்கு கையாளப்பட்ட உவமானம் யாது?.....

3) பாலைப்போல நிலவு வானில் பவனிவரப் போகுது கோலக் கடல் அலைக் கைதட்டிக் குதூகலிக்கப் போகுது நீலவானும் கண் சிமிட்டி நின்று பார்க்கப் போகுது மாலை வேளை மலர்ந்து கங்குல் மங்கை தோன்றப் போகிறான். இப்பாடல் இடம்பெற்றுள்ள உவமானம் யாது?.....

⁂ பின்வரும் தடித்த எழுத்திலுள்ள இணைமொழிகள் உணர்த்தும் கருத்தை எழுதுக.

1) சங்கரன் **அல்லும் பகலும்** (.....) பாடுபட்டான்.

2) சிலர் **ஆடிப்பாடி** (.....)வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று கூறுவார்.

3) அவர் என்னிடம் **கரடு முரடான** (.....)பாதையூடாக செல்ல முடியுமா? என்று கேட்டார்.

4) முகுந்தன் **ஏழை எளியவர்**களுக்கு(.....) வாரி வழங்குவான்.

5) நாம் பெரியவர்களுடன் **ஏட்டிக்குப் போட்டி**யாக(.....) நடந்து கொள்ளக்கூடாது.

6) நாளைய விழாவிற்கான ஏற்பாடுகள் **தடல் புடலாக** (.....) நடைபெறுகின்றன.

7) அவரது **பேரும் புகழும்** (.....) உலகெங்கும் பரவியது.

⬥ பின்வரும் முகபாவங்களை நன்கு அவதானித்து பொருத்தமான இலக்கத்தை கட்டத்திலிருந்து தெரிந்து எழுதுக.

1.அனுதாபம்	2.கோபம்	3.மகிழ்ச்சி	4. பயம்	5.துக்கம்



( )	( )	( )	( )	( )

⁂ பின்வரும் சம்பவங்கள் தெரியப்படுத்தும் உணர்வுகளை புள்ளிக் கோட்டில் எழுதுக

1.அனுதாபம் தெரிவித்தல் / 2.கோபத்தோடு கூறுதல் / 3.மகிழ்ச்சியை வெளிப்படுத்தல் / 4. பயத்தோடு கூறுதல் / 5.துக்கத்தினை வெளிப்படுத்தல்

1) .....

கவலைப்படாதீர்கள். நடந்தது நடந்துவிட்டது. எல்லாம் நன்மைக்கே என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். தைரியமாக இருங்கள்.

www.ikedu.lk

2) .....

நேரத்திற்கு வரவேண்டும் என்று எத்தனை முறை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இதுதான் இறுதி எச்சரிக்கை. இனிமேலும் தாமதமாக வந்தால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

3) .....

‘‘எனது கவிதைக்கு முதல் பரிசு கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைத்தி ருக்கவில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரிய வில்லை. முதலில் அம்மாவிடம் சொல்ல வேண்டும்’’

4) .....

அம்மா..... நான் .... நா... ன்.... பேனாவைத் தொலைத்து விட்டேன்.....அம்மா.. இனிமேல் தொலைக்கவே..... மாட்டேன்...

5) .....

நாம் எல்லோரும் ஒன்றாகப் படித்தோம். இன்ப, துன்பங்களில் பங்கு பற்றினோம். இன்றுடன் பிரியப் போகின்றோம் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை.... இதற்கு மேல் என்னால் பே...ச.. முடியவில்லை...

6) .....

⁂ பின்வரும் பாடல்களை படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடையைக் கோடிடுக.

வெள்ளைக் கொக்கு ஒன்று வந்து — எல்லையற்ற கோபத்தோடு
மீனைக் கொத்திப் பார்த்தது — இன்னும் கொக்கு முயன்றது
துள்ளித் துள்ளி மீனும் ஓடித் — கல்லில் துள்ளி விழுந்த மீனை
தூரம் பாய்ந்து போனது. — கௌவிக் கொண்டு பறந்தது.

(1) எல்லையற்ற என்பது

1அடக்க முடியாத 2. விருப்பமற்ற 3. ஆசையுள்ள


(2) கௌவிக் கொண்டு என்பது

1பிடித்துக் கொண்டு 2. எடுத்துக் கொண்டு 3. கொத்திக் கொண்டு

(3) வெள்ளைக் கொக்கு என்பது


1வினை அடைமொழி 2. பெயர் அடைமொழி 3. இணைமொழி

⁂ சரியான விடையைக் கண்டு கீறிடுக

1) 


உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{1}{2}$ (2) $\frac{1}{3}$ (3) $\frac{1}{4}$

2) 


உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{3}{8}$ (2) $\frac{1}{2}$ (3) $\frac{1}{4}$

3) 


உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{4}{8}$ (2) $\frac{1}{4}$ (3) $\frac{1}{5}$

4) 


உருவில் நிழற்றப்பட வேண்டிய பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{3}$ (3) $\frac{3}{4}$

5) 

உருவில் நிழற்றப்பட வேண்டிய பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?


(1) $\frac{4}{12}$ (2) $\frac{4}{6}$ (3) $\frac{1}{2}$

6) 

உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{3}{6}$ (2) $\frac{1}{3}$ (3) $\frac{4}{6}$


7 ⁂ உருக்களில் நிழற்றப்பட்ட பகுதிகளை கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?




(1) $\frac{7}{8}$ (2) $\frac{3}{8}$ (3) $\frac{2}{4}$


www.ikedu.lk


⁂ உருக்களில் நிழற்றப்படாத பகுதிகளை கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?

8)  (1) $\frac{2}{8}$ (2) $\frac{4}{8}$ (3) $\frac{3}{4}$


9)  ⁂ உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

(1) $\frac{1}{8}$ (2) $\frac{7}{8}$ (3) $\frac{4}{5}$


10)  ⁂ உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?.....

11)  உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?..


⁂ சரியான விடையைக் கண்டு அதன் கீழ்கீறிடுக

1) உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? 


1). $\frac{3}{4}$ 2). $\frac{4}{8}$ 3). $\frac{5}{8}$

2) உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? 


1). $\frac{4}{8}$ 2). $\frac{5}{8}$ 3). $\frac{3}{4}$

3) உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? 

1). $\frac{4}{8}$ 2). $\frac{1}{4}$ 3). $\frac{5}{8}$

4) உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? 

1). $\frac{6}{8}$ 2). $\frac{2}{4}$ 3). $\frac{5}{8}$

5) உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? 

1). $\frac{4}{8}$ 2). $\frac{1}{2}$ 3). $\frac{6}{8}$

www.ikedu.lk

அன்பின் பெற்றோர்கள் அறிய,

உங்கள் சிறார்களுக்கு விடுமுறை காலத்தில் எவ்வாறான பயிற்சிகளை வழங்க வேண்டும் ,எப்போது வழங்க வேண்டும் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய தீர்வாக இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை பிரசுரித்துள்ளேன். இங்கு காணப்படும் பயிற்சிகளை ஒரு உதாரணமான பயிற்சியாகக்கருதி இதுபோன்ற பல வினாக்களை உருவாக்கி உங்கள் பிள்ளைகளுக்கு தினமும் ஒரு பயிற்சியாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கி அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விடுமுறையை ஆக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை யாரும் **வியாபார நோக்கத்திற்குப்** பயன்படுத்த வேண்டாம் என்றும் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

❖தொலைபேசி இல

071-182-6-181 – 077-635-8-304 – 047-222-1-503

❖மின்னஞ்சல்

primaryisa@gmail.com

❖தொடர்புகளுக்கு

STUDY CENTRE

(The Centre for Primary Education)

48/1, BARRACK STREET,

HAMBANTOTA.

www.lkedu.lk